TNJR

Reg.No. | | | | | |

# அரையாண்டு பொதுத் தேர்வு - 2019

காலம்:2.30மணி    வகுப்பு - 9    மதிப்பெண்கள்: 100

## சமூக அறிவியல்

பகுதி - 1

14 x 1 = 14

I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர் ..........
அ) தனநந்தர் ஆ) சந்திரகுப்தர் இ) பிம்பிசாரர் ஈ) சிசுநாதர்
2. ஹான் அரச வம்சத்தை தோற்றுவித்தவர் .......... ஆவார்.
அ) வு-தை ஆ) ஹங்சோவ் இ) லீயு-பங் ஈ) மங்ககான்
3. நிலப்பிரவுத்துவம் .......... மையமாகக் கொண்டது.
அ) அண்டியிருத்தலை ஆ) அடிமைத்தனத்தை இ) வேளாண் கொத்தடிமையை ஈ) நிலத்தை
4. கிருஷ்ணதேவராயர் ......... ன் சமகாலத்தவர்.
அ) பாபர் ஆ) ஹுமாயுன் இ) அக்பர் ஈ) ஷெர்ஷா
5. சரியான கூற்றினைக் கண்டுபிடி.
அ) புதிய தரை மற்றும் கடல்வழி கண்டுபிடிப்புகளால் பொருளாதார மையங்கள் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து ஸ்பெயின் மற்றும் போர்ச்சுகலுக்கு மாற்றப்பட்டன.
ஆ) குதிரைகள் அமெரிக்காவை பிறப்பிடமாகக் கொண்டவை.
இ) நவீன யுகத்தின் தொடக்ககாலத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடவில்லை
ஈ) போர்ச்சுகீசியர்கள் அரேபியர்களுடன் இணைந்து இந்தியாவில் வாணிக நடவடிக்கைகளை மேற்கொண்டார்
6. கடல் தூண்கள் உருவாவதற்குக் காரணம் .........
அ) கடல் அலை அரித்தல் ஆ) ஆற்றுநீர் அரித்தல் இ) பனியாறு அரித்தல் ஈ) காற்றின் படியவைத்தல்
7. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) வளைகுடா நீரோட்டம்-பசிபிக் பெருங்கடல்
ஆ) லாப்ரடார் கடல் நீரோட்டம் - வட அட்லாண்டிக் பெருங்கடல்
இ) கேனரி கடல் நீரோட்டம் - மத்திய தரைக்கடல் ஈ) மொசாம்பிக் கடல் நீரோட்டம்-இந்தியப்பெருங்கடல்
8. புவியின் குளிர்ச்சியான பல்லுயிர்த் தொகுதி .........
அ) தூந்திரா ஆ) டைகா இ) பாலைவனம் ஈ) பெருங்கடல்கள்
9. மக்கள் தொகை பற்றிய புள்ளியல் விவரக் கல்வி .......... ஆகும்.
அ) மக்கள் தொகையியல் ஆ) புறவடிவமைப்பியல் இ) சொற்பிறப்பியல் ஈ) நிலநடுக்க வரைவியல்
10. ஒரு நிலவரைபடத்தின் கருத்து (அல்லது) நோக்கத்தைக் குறிப்பிடுவது .........
அ) தலைப்பு ஆ) அளவை இ) திசைகள் ஈ) நிலவரைப்படக்குறிப்பு
11. ஐ.நா. சபையின்படி .......... வயது நிறைவுபெறாதோர் குழந்தை ஆவார்.
அ) 12 ஆ) 14 இ) 16 ஈ) 18
12. இந்தியத் தேர்தல் ஆணையம் ஒரு ..........
அ) சுதந்திரமான அமைப்பு ஆ) சட்டபூர்வ அமைப்பு இ) தனியார் அமைப்பு ஈ) பொது அமைப்பு
13. தமிழ்நாட்டில் ......... துறையில் அதிக நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.
அ) உற்பத்தி ஆ) வங்கியில் இ) சிறுதொழில் ஈ) வேளாண்மை
14. இவற்றுள் உணவல்லாத பயிர் எது?
அ) கம்பு ஆ) கேழ்வரகு இ) சோளம் ஈ) தென்னை

பகுதி - 2 10 x 2 = 20

**II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா).**

15. சிகுரட்களின் முக்கியப் பண்புகளைக் கூறுக.
16. புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.
17. பட்டு வளர்ப்பு என்றால் என்ன?
18. மறுமலர்ச்சியின் விளைவுகளை சுருக்கமாக எழுதுக.
19. பனியாறு என்றால் என்ன?
20. மழைப்பொழிவின் வகைகள் யாவை?
21. நீர்க்கோளம் பொருள் கூறுக.
22. உயிரினப்பன்மை என்றால் என்ன?
23. அரசியல் கட்சி என்பதன் பொருள் யாது?
24. போக்சா (Pocso) வரையறு.
25. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் யாவை?
26. இயற்கைப்பணம் என்றால் என்ன?
27. நிலத்தடிநீரின் அளவையும், தன்மையையும் யாரால் கண்காணிக்கப்படுகிறது?
28. மக்கள் தொகை அடர்த்தி பற்றி நீவிர் அறிவதென்ன?

பகுதி - 3 10 x 5 = 50

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 42 கட்டாய வினா)**

29. கோடிட்ட இடத்தை நிரப்புக.
    1) கோடாரிக் கருவிகளும், பிளக்கும் கருவிகளும் ............. பண்பாட்டைச் சேர்ந்த கருவிகளாகும்.
    2) ............ என்பது ஜப்பானின் முந்தையப் பெயர் ஆகும்.
    3) ......... நீர்வாழ் பல்லுயிர்த்தொகுதி நன்னீர் மற்றும் கடல்நீர் கலக்கும் இடத்தில் காணப்படும்.
    4) தேசிய மனித உரிமை ஆணையம் ........... ஆண்டு அமைக்கப்பட்டது.
    5) தமிழகத்திற்குப் பெரும் நீர் ஆதாரமாமக இருப்பது ............. பருவமழையாகும்.
30. பொருத்துக. (வரலாறு)
    1) கல்வெட்டியல் - அரேபிய இரவுகளின் நகரம்
    2) எண்வழிப்பாதை - அக்பரின் அரச சபை
    3) பிளாட்டோ - கல்வெட்டு குறிப்புகளை ஆராய்வது
    4) பாக்தாத் - தூய மன்நிலையை அடைவதற்கான பாதை
    5) தான்சேன் - தத்துவஞானி
31. பொருத்துக. (புவியியல்)
    1) கல் விழுது - பசிபிக் பெருங்கடலின் ஆழமான பகுதி
    2) காற்று வேகமானி - ஒலிமாசடைதல்
    3) மரியானா அகழி - சுண்ணாம்புப் பாறை
    4) ஒலிபெருக்கி - நிலநடுக்கம்
    5) இயற்கைப் பேரிடர் - காற்றின் வேகம்
32. பொருத்துக. (குடிமையியல்)
    1) மதகுருமார்கள் ஆட்சி - 2005
    2) இருகட்சிமுறை - வாட்டிகன்
    3) இந்து வாரிசுரிமைச்சட்டம் - அமெரிக்க ஐக்கியநாடுகள்
    4) கூட்டாட்சி முறை - அரசியல் உரிமை
    5) வாக்களிக்கும் உரிமை - இரட்டை அரசாங்கம்

33. வேறுபடுத்துக.

அ) காற்று மோதும் பக்கம் – காற்று மோதாப்பக்கம்

ஆ) உயர் ஓதம் – தாழ் ஓதம்

இ) காரணம் கூறு: மக்கள் தொகை வளர்ச்சி கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவேண்டும்

34. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயுள்ள ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் எழுதுக.

35. புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகளை விவரி.

36. மேகங்களின் வகைகளை விவரி.

37. மக்கள் தொகைப் பரவலை பாதிக்கும் காரணிகள் யாவை?

38. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?

39. ஒற்றையாட்சி முறையின் நிறைகளை விவரி.

40. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை? விவரித்து எழுதுக.

41. பணத்தின் செயல்பாடுகளைப் பட்டியலிடுக.

42. இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

1) காஷ்மீர் 2) டில்லி 3) துவாரசமுத்திரம் 4) மாளவம் 5) வங்காளம்

## பகுதி – 4 **2 x 8 = 16**

43. இரு வினாக்களுக்கு விடையளி (தலைப்பு வினா)

A) தொடக்க கால நாகரிகம்

அ) நாகரிகம் என்றால் என்ன?

ஆ) தொடக்க கால நாகரிகங்களின் பெயர்களை எழுதுக.

இ) பெரும்பாலான மக்களுக்கு வாழ்வாதாரமாக இருந்தவை எவை?

ஈ) நாகரிகம் வடிவம் பெறத்தொடங்கியபோது என்ன நடந்தது?

B) ஜொராஸ்ட்ரியனிசம்

அ) இதைத் தோற்றுவித்தவர் யார்?

ஆ) அவர் 'ஒளியின் கடவுள்' என்று யாரைப் பிரகடனம் செய்தார்?

இ) ஜொராஸ்ட்ரியர் எதனைப் போதித்தார்?

ஈ) வழிபாட்டின் உயர்ந்த வடிவம் எது? (அல்லது)

மத சீர்திருத்தம்

அ) மார்ட்டின் லூதர் தேவாலயத்தை ஏன் எதிர்த்தார்?

ஆ) 'நம்பிக்கையினால் நியாயப்படுத்துதல்' என்ற கொள்கை குறித்து எழுதுக.

இ) எட்டாம் ஹென்றி ஆங்கிலிக்கன் திருச்சபையை ஏன் நிறுவினார்?

ஈ) இக்னேஷியஸ் லயோலாவின் பங்களிப்பு குறித்து எழுதுக.

புவியியல் சார் கண்டுபிடிப்புகள்

அ) மாலுமி ஹென்றி என்பவர் யார்?

ஆ) புவியியல்சார் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை வரிசைப்படுத்துக.

இ) அமெரிக்காவில் உள்ளூர் மக்களின் அழித்தொழிப்புக்கு இட்டுச்சென்றது எது?

ஈ) முக்கோண வர்த்தகம் என்றால் என்ன?

44. உலக வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

1) கலிபோர்னியா 2) புளோரிடா 3) பெரு 4) அலாஸ்கா 5) லேப்ரடார்

6) கிராண்ட் பேங்க் 7) மர்மான்ஸ்க் துறைமுகம் (அல்லது)

இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

1) மன்னார் வளைகுடா 2) பாக்நீர்சந்தி 3) மும்பை 5) காவிரி டெல்டா

5) மெரினா கடற்கரை (சென்னை) 6) மதுரை 7) பூனா 8) இந்திய பெருங்கடல்

*********